# "எனக்கும் அனுமதி கொடுங்கள்!"

இந்தச் சிற்றூரிலும் இவ்வளவு தாய்மார்கள் ஊர்வலத்தில் கலந்து கொண்டதைக் கண்டு பெரு மகிழ்ச்சியடைகிறேன். போதுமான கல்வியறிவு இல்லாத, தெளிவான நிலை இல்லாத இந்தக் காலத்தில் இப்படிக் கூடியிருப்பதற்கு தந்தை பெரியார் அவர்களின் இத்தனை ஆண்டு உழைப்பேதான் காரணமாகும். இவ்வளவு பேர்களும் பகுத்தறிவுடன் இயக்கக் கொள்கையை உடையவர்கள் என்பதை அறிய மிகவும் மகிழ்கிறேன். லால்குடி வட்டத்திலிருந்துதான் அதிகம் பேர் சிறைக்குப் போயிருக்கிறீர்கள். பெரியார் பெருமைப்படும் அளவில் கொள்கைப்படி நடந்தால் நல்ல நிலையில் வாழலாம். உடல் நலம் கெட்டிருந்தாலும் பொதுத் தொண்டின் மூலம் மக்களை உயரச் செய்கிறோம் என்ற எண்ணத்தில்தான் இந்த நிலையிலும் பெரியார் அவர்கள் போராடி வருகிறார்கள். அடுத்த போராட்டத்தில் இன்னும் அதிகமான தாய்மார்கள் கலந்து கொள்ள வேண்டுகிறேன். எனக்கும் அனுமதி கொடுக்குமாறு தந்தை பெரியார் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

*(12-11-1958 அன்று மேலவாளாடியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அன்னை மணியம்மையார் அவர்கள் ஆற்றிய உரை)*

– *"விடுதலை" (25.11.1958)*